P.R.NO:- 11

## திருச்சிராப்பள்ளி மாவட்டம்

## கால்நடை பராமரிப்பு பண்ணை பூங்கா அடிக்கல் நாட்டு விழா மற்றும் பிரம்மாண்ட வேளாண்மை கருத்துக் கண்காட்சி அழைப்பிதழ்

**அன்புடையீர்,**

சேலம் மாவட்டம், தலைவாசல் கால்நடை பராமரிப்பு பண்ணை பூங்கா அடிக்கல் நாட்டு விழாவினை முன்னிட்டு 2020 பிப்ரவரி 9, 10 மற்றும் 11 ஆகிய நாட்களில் பிரம்மாண்ட வேளாண் கருத்துக் கண்காட்சி (Mega Agricultural Exhibition and Mela) நடைபெற உள்ளது.

இவ்விழாவினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் துவக்கி வைத்து கருத்துக் கண்காட்சி அரங்குகளை பார்வையிட உள்ளார்கள். மேலும், வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலர், வேளாண்மை இயக்குநர் மற்றும் சகோதரத்துறை தலைவர்களும் விழாவில் கலந்துகொண்டு சிறப்பிக்க உள்ளார்கள்.

வேளாண்துறை சார்பில் மாபெரும் கருத்துக்காட்சி மற்றும் வேளாண் உபகரணங்கள் செயல்விளக்கம் தொடர்பான கண்காட்சி மற்றும் தொழில்நுட்ப விளக்கங்கள், துறையின் செயல்பாடு மற்றும் திட்டங்கள், பயிர் வாரியான பாரம்பரிய இரகங்கள், புதியதாக கண்டுபிடிக்கப்பட்ட இரகங்கள், மண் மேலாண்மை பற்றிய புதிய தொழில்நுட்பங்கள், பூச்சி நோய் தாக்குதலை கட்டுப்படுத்தும் வழிமுறைகள் மற்றும் நவீன நீர் மேலாண்மையின் செயல்விளக்க கண்காட்சி மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட வேளாண் விளைப்பொருட்களின் விற்பனை நிலையங்கள், வேளாண் சார்ந்த பல்வேறு தலைப்புகளில் கருத்தரங்குகள் மற்றும் கலைநிகழ்ச்சிகளும் ஏற்பாடு செய்யப்பட்டு இவ்விழா நடைபெற உள்ளது. இக்கண்காட்சியில் பி.எம்-கிஸான், பி.எம்.-மாந்தன் தொடர்பான முழு விபரங்களும் இடம்பெற உள்ளது. மேலும், இத்திட்டத்தில் பயனடைய விரும்பும் விவசாயிகள் தங்களுடைய நிலம் தொடர்பான ஆவணங்கள், வங்கி புத்தக நகல் மற்றும் ஆதார அட்டை நகல் கொண்டு சென்று பதிவு செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

எனவே, நமது மாவட்டத்தில் வேளாண்மை துறை மற்றும் சகோதரத்துறைகளின் புதிய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தி உணவு உற்பத்தியில் தன்னிறைவு மற்றும் இருமடங்கு இலாபம் பெற விவசாயிகளாகிய தாங்கள் மற்றும் உழவர் மன்ற உறுப்பினர் உழவர் உற்பத்தியாளர்கள் குழு உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு விவசாய சங்கப் பிரதிநிதிகள் ஆகிய அனைவரும் நமது மாவட்டத்தின் சார்பாக கலந்து கொண்டு பயன்பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.